# காரைக்கால்அம்மையார் பாடல்களில் பெண்மை உணர்வு

**இரா.சேகர்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
திரு.வி.க. அரசு கல்லூரி
திருவாரூர்

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** I
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

## முன்னுரை

சைவசமயத்தின் வேதநூலாகப் போற்றப்பெறும் பன்னிருதிருமுறையில் பதினோராந் திருமுறையில் காரைக்கால் அம்மையார் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அறுபத்துமூன்று நாயன்மார்களுள் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள ஒரே பெண்ணடியார் காரைக்கால் அம்மையாராவர். இவர் திருவாலாங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டு, திருஇரட்டை மணிமாலை, அற்புததிருவந்தாதி என்ற மூன்று பிரபந்தங்களைப் பாடியுள்ளார். இறைவனால் அம்மையே என்றழைக்கப்பட்ட பெருமைக்குரிய காரைக்கால் அம்மையாரின் பாடல்களில் இடம்பெறும் பெண்மை உணர்வை இக்கட்டுரை எடுத்துக் கூறுகின்றது.

அம்மையார் புனிதவதியாராக இருந்து இல்லறம்புகுந்த பின்பும், அடியார் பெருமக்களைப் போற்றுதலிலும், அவர்களுக்கு அன்னம் பாலிப்பதிலும் சிறந்து விளங்கினார். மனையறம்ஓம்பி மாண்புகாத்து வந்தார். மாம்பழத்தின் மூலம் தம் கணவன் தம்மைத்துறந்து தெய்வமாக வழிபட்டமையை அறிந்து கணவனுக்காகப் பெற்றவுடல் இனி எழிலும் சதைப்பற்றும் கொள்ளல் கூடாது என்றெண்ணித் தன் ஊனுடலை வெறுத்து எலும்புருவைப் பெற்றார். இந்நிலையில் இறைத்தன்மை அவர் மீது நின்றது. அரவுபோல் ஊர்ந்து செல்லல், தலையால் நடத்தல் போன்ற அற்புத நிலைகளையும் பெற்றுக்கொண்டார். அந்நிலையில் அவர்தம் உள்ளத்திலிருந்து அரும்பெருங் கருத்துக்கள்கொண்ட அற்புதப்பிரபந்தங்கள் வெளிவந்தன. தம்மைக் ‘‘காரைக்கால் பேய்’’ என்று அறிமுகப்படுத்திக்கொண்டார். காரைக்காலம்மையாரின் பிரபந்தங்களில் பெண்மை உணர்வுகள் மேலோங்கி காணப்படுகின்றன.

## உமாதேவியார்மீது அம்மையார் காட்டும் அன்பும் பாசமும்

சுடுகாட்டில் வெளிறிக்கிடக்கும் கூந்தலையும், அலறுகின்ற பிளந்த வாயையுடையதுமான பேய்கள் ஒன்றுகூடிப் பிணங்களைத் தின்று அணங்கு ஆடுகின்ற இடுகாட்டில் சிவபிரான் ஆடுவதை உமையம்மையார் மருண்டு நோக்குவார் என்று கூறுமிடத்தில் அம்மையாரின் பெண்மைக்குரிய அச்சம் வெளிப்படுகின்றது. இதனை,

> **‘‘பேய்கள் கூடிப்பிணங்கள் மாந்தி சுவைக்கும் பெருங்காட்டின்**
> **மாயன் ஆட மலையான் மகளும் மருண்டு நோக்குமே’’**
> **(தி.ஆ.திருப்பதிகம் -8)**

என்ற பாடலடிகள்மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. சிவபெருமானிடம் நீண்ட சடையிலுள்ள கங்கையைக்கண்ட உன் இடப்பக்கத்திலுள்ள உமையம்மை நாணின் நீ என் செய்வாய்? என்பதை,

**‘‘இனிவார் சடையினில் கங்கையென்**
**புலீளைஅங் கத்திருந்த**
**குனிவாய் மலையமங்கை நாணில் என் செய்தி“ - (அற்புதத்திருவந்தாதி - 8)**

என்ற பாடலடிகளின்மூலம் பெண்களுக்கே உரிய இயல்பான குணம் அம்மையாரிடம் வெளிப்படுதலை அறியமுடிகின்றது. பெருமையுடையார்கள் இருப்பார்களேயானால் அம்மையின்மேல் அரவம் ஊராமல் இருந்திடக் காக்கவேண்டும். சிவனின் மார்பிலேயே அவ்வரவு ஊர்ந்து நின்றிடச்செய்தல் கூடாது. சிவனுக்கும் அம்மைக்கும் தொலைவு நெடுந்தொலைவோ? அவன் மார்பில்தான் மாலை உள்ளதே. அதுவே போதுமே இந்நாகம் எதற்கு? எப்பொழுதும்போல் அப்பாம்பு இருந்திடும் என்பதற்கு உறுதி உண்டா? அந்நாகம் ஒருநாள் உமையம்மையையும் சாரலாம். அதனினும் பாவம் வேறுண்டோ? என்ற அச்சத்துடன் கேட்கிறார். இதனை,

**"ஊர்திடுமா நாகம் ஒருநாள் மலைமகளைச்**
**சுலீர்ந்திடுமேல் ஏபாவம் தான்” - (அற்புதத்திருவந்தாதி -13)**

என்ற பாடலடிகள்மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. திருவடியில் அமைந்துள்ள வீரகண்டை ஒலிக்கப்பெருகும் நள்ளிரவில், ஈமமாகிய இடுகாட்டில் பேய்களோடு வெப்பத்தைத் தாங்குவதற்குரிய தீயில் நீ தாண்டவமாடிடும் அவ்விடத்திற்குத் தாழ்ந்த கூந்தலைஉடையவரும், சிறந்த முதுமைப்பெற்றவரும் திரட்சியான வளையல்களை அணிந்தவருமாகிய உமையை உன் இடப்பாகத்தில் வைத்துக்கொண்டுச் செல்லவேண்டாம் என்று பெண்மைக்குரிய பரிவோடு சிவனிடம் கூறுகின்றார். இதனை,

**‘‘குழலார் சிறுபுறத்தும் கோல்வளையைப் பாத்து**
**எழிலாக வைத்தேக வேண்டா - கழலார்ப்பப்**
**பேரிரவில் ஈமப் பெருங்காட்டில் பேயோடும்**
**ஆரழ்வாய் நீயாடும் அங்கு” - (அற்புதத்திருவந்தாதி - 51)**

என்ற பாடல் வரிகள்மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. ஒப்பில்லாத வெண்மையான இடபக்காளையைப் போன்ற வாகனத்தைக், கோவைக் கனியையொத்த வாயையுடைய உமையம்மைக்கென்று தேடிப்பெறாது தனக்குமட்டும் பெற்றுக்கொண்டதை அம்மையார் உரிமையுடன் சுட்டிக்காட்டுவதைச்,

**‘‘சுமக்கின்ற பிள்ளைவெள் ளெறொப்ப**
**தோன்று தொண்டைக் கனிவாய்**
**உமைக்கென்று தேடிப் பெறாதுட**
**னேகொண்ட உத்தமரே” (திரு இரட்டைமணிமாலை - 19)**

என்ற பாடல்வரிகளின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. சிவபெருமான் மீது காட்டும் தாய்மையுணர்வுப் பண்புகள் இறைவனுக்கு அறிவுரைக்கூறல் அய்யனே உன்னிடம் உரைக்கப்படுவது ஒன்றுண்டு. அது யாதெனில் செவ்வானத்தைக் கற்றையாகத் தொகுத்ததுபோன்ற தொகுதியின் மேல் ஒலிக்கின்ற அரவினை எப்பொழுதும் தொடாதே ஏனெனில் அது கீழ் இறங்கி ஓடிவிடும் என்று இறைவனுக்கே அறிவுரைக் கூறுவதை,

**‘‘இதைக்கின்ற பாம்பினை என்றும்**
**தொடேல் இழிந்து ஒட்டந்து எங்கும்” (திரு.இரட்டைமணி மாலை - 7)**

என்ற வரிகளின்மூலம் அறிந்து கொள்ளமுடிகின்றது. ஏறு அல்லாமல் எம்பிரானுக்கு வேறு வாகனம் இல்லையோ? கங்கையாறு முழுமையாய்ப் பாய்கின்ற ஒளி கொண்ட சடையை உடையார்க்கு அதுவல்லாமல் அரவமும் உலவுகின்றது. இவை உனக்கு எப்படிக்கிடைத்தனவோ? என்று அக்கறையுடன், அச்சத்துடன் வினவுகின்றார்.

**சிவபெருமானிடம் பிச்சையேற்க வேண்டாம் எனக்கூறல்**

அம்மையார் சிவபெருமானிடம், எம்பிரானே, நின்பெருமையும் பிறர் கூறிடும் பிழையையும் எண்ணாமல் எவ்விடத்தும் இரந்து பிச்சையேற்றுத் திரிகின்ற இவ்வடிவமும், இராக்காலத்தில் சுடுகாட்டில் ஆடுவதுவும் எதற்கு? உன்னைக் காணாமல் இருந்துகொண்டு நின்னைப்பற்றிக் குறைகூறுவதுவும் எதற்கு? என்று தாயன்புடன் கேட்பதை,

**“இங்கிருந்து சொல்லுவதென் எம்பெருமான் எண்ணாரே**
**எங்கும் பலதிரியும் எத்திறமும் - பொங்கிரவில்**
**ஈமவனத்து ஆடுவதும் என்றுக்கென்று ஆராய்வோம்” - (அற்புதத்திருவந்தாதி -25)**

என்ற பாடலடிகளின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. இறைவனே நீ உலகம் எல்லாம் இரக்கச் சென்றாலும் குற்றம் இல்லை. ஆபரணமாகப் பூண்டிருக்கும் தீங்கு பயக்கும் தீய பாம்பு நீங்கப் போவாயாக. ஏனெனில் உனக்குப் பிச்சையிடும் தூயமனமுள்ள பெண்கள் விடம்பொருந்திய நாகம் உன்மேல் ஆடி அதனைக்கண்டு அஞ்சி உன் அருகில் வந்து பிச்சையிடமாட்டார்கள் என்று தாய்மைக்கே உரிய அன்புடன் கூறுவதே

**‘‘நீயுலகம் எல்லாம் இரப்பினும் நின்னுடைய**
**தீய அரவொழியச் செல்கணடாய் - தூய**
**மடவரலார் வந்து பலியிடார் அஞ்சி**
**விடஅரவம் மேல்ஆட மீக்கு” - (அற்புதத்திருவந்தாதி - 57)**

என்ற பாடலடிகளின்மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

**பிச்சைக்காக ஊர்தோறும் திரியவேண்டாம் என வேண்டல்**

பிறரிடம் கையேந்துதல் இழிவானச் செயல். தனது இறைவனே பிச்சையேற்கும் சூழலில்,

**“திங்கள் இது சூழ்ச்சிப்பலிக்கு என்று ஊர்திரியேல்**
**எங்கள் பெருமானே என்றிரந்து” - (அற்புதத்திருவந்தாதி -43)**

என்ற பாடலின் மூலமாக, இளம்பிறையைத் தலையில்சூடி சிறிதான பிச்சைக்காகப் பிரானே நீ ஊர்தோறும் திரியாதே. தேவர்கள் உன்னிடம் இதைக் கூறாவிட்டால் ஒன்றும் உதவாத யாம் அவரிடம் கூறிடும் தன்மையை வன்மையை உடையவளாக நான் இல்லையேஎன்று வருந்தி உலகிற்கே படியளக்கும் பிரான் பலியேற்க வேண்டாமே என்று கூறுகின்றார்.

**பொன்னாபரணத்தை அணிந்துகொள்ளுமாறு வேண்டுதல்**

ஆணவம், கன்மம், மாயை என்ற முப்புர அரக்கர்களாகிய பகைவர்களின் வலிமை அழியும்படி அப்பகைவர்களின் மும்மதில்களையும் அழித்திட ஓர் அம்பை எய்தியவனே உன் திருமேனிமேல் ஓர் அரவினையும் நீ விரும்பி அணியாதே. வேறொரு பொன்னாபரணத்தைப் பூணாக நீ விரும்பி அணிகின்றாய். நானோ அஞ்சி நடுங்குகின்றேன் என்று பெண்மையுணர்வுடன் அம்மையார் கூறுகின்றார். இதனை,

**“அரவம் ஒன்று ஆகத்து நீ நயந்து பூணேல்**
**பொன்னாரம் மற்றொன்று பூண்” - (அற்புதத்திருவந்தாதி - 27)**

என்ற பாடலடிகளின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. இறைவன் கொலைத்தன்மை கொண்ட நாகப்பாம்பினை கழுத்திலே அணியாக ஆபரணமாகக் கொண்டுள்ளார். மற்றொரு பாம்பைச் சிறந்த அரையில் உடுத்திப் புலித்தோல் ஆடைமேல் கச்சாக இறுகக்கட்டியுள்ளார். மூன்றாவதாக ஓர் அரவினை அழகிய திருமுடியில் சுற்றியுள்ளார். இவரின் இச்செயல்கள் யாவும் அறிவில்லாத எனக்கு அச்சத்தைத் தருகின்றன என்பதைப்,

**‘‘பூணாக வொன்று புனைந்தொன்று பொங்கதனின்**
**நாணாக மேல் மிளிர நன்கமைத்துக் - கோள் நாகம்**
**பொன்முடிமேற் சூடுவது..” - (அற்புதத்திருவந்தாதி - 28)**

இந்த பாடலடிகளின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

**நிறைவுரை**

காரைக்கால் அம்மையார் இறைவனாகிய சிவபெருமான் மீது மிகப்பற்றுடையவராக இருந்தாலும் இறைவனின் மீதுள்ள குறைகளையும், தம்போன்ற பெண்ணினம் அவர் திருவுருவைக் கண்டும், அவர் செயல்களைக் கண்டும், அச்சம்கொள்ளாதபடி அவரை நெருங்கிவரும்பொருட்டு தம் பாடல்கள்மூலம் வெளிப்படுத்தியுள்ளார். மேலும் அம்மையார் பேயுருவில் இருந்தாலும் பெண்மைக்கு இயல்பாக இருக்கும் தாய்மை உணர்வும், பெண்மையுணர்வும் அவர்தம் பாடல்கள் வழி அறிந்துகொள்ள முடிகின்றது. இஃது பெண்ணினத்திற்கு சிறப்பளிக்கும் விதமாய் அமைந்துள்ளது என்பதை

உணரமுடிகின்றது. தனக்கு தாய்போன்று ஆலோசனைகூறும் அம்மையாரை இறைவன் அம்மையே என்று அழைத்ததில் வியப்பேதுமில்லை.

**துணை நின்ற நூல்கள்**

1. நடராசன், பி.ரா. பதினோராம் திருமுறை, உமாபதிப்பகம், சென்னை.
2. வெள்ளைவாரணன்., க. பன்னிருதிருமுறை வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1997.
3. நாராயண வேலுப்பிள்ளை, எம். பன்னிரு திருமுறைகள் ஓர் அறிமுகக் கையேடு, நர்மதா வெளியீடு, சென்னை.
4. அழகப்பன், வெ.சு. பதினோராந்திருமுறைத்திறன், கண்ணம்மை பதிப்பகம், காரைக்குடி.